# මහවැලි, කෘෂිකර්ම, වාරිමාර්ග සහ ග්‍රාමීය සංවර්ධන අමාත්‍යාංශය
மகாவலி ,கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு
Ministry of Mahaweli, Agriculture, Irrigation and Rural Development

(කෘෂිකර්ම අංශය / விவசாயப் பிரிவு / Agriculture Division)

නො. 288, ශ්‍රී ජයවර්ධනපුර මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව.
இல. 288, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய, இலங்கை.
No. 288, Sri Jayawardenepura Mawatha, Rajagiriya, Sri Lanka.


***Translated Copy***

| | | |
|---|---|---|
| මගේ අංකය. / எனது இல. / My No. 7/1/3/2020 சிறுபோகம்/சுற்றறிக்கை | ඔබේ අංකය. / உமது இல. / Your No. | දිනය. / திகதி. / Date. 2020.03.30 |

கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்,
மாவட்டத்திற்கு பொறுப்புடைய சகல கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர்கள் / உதவி ஆணையாளர்கள்,
சகல கமநல அபிவிருத்தி பிராந்திய உத்தியோகத்தர்கள்,

மகாவலி பணிப்பாளர் நாயகம்,
நீர்ப்பாசன முகாமைத்துவ பிரிவு பணிப்பாளர்,

விவசாய பணிப்பாளர் நாயகம்,
மாகாண விவசாய பணிப்பாளர்கள்,

தலைவர், இலங்கை உரக் கூட்டுத்தாபனம்,
தலைவர், கொழும்பு வர்த்தக உரக் கூட்டுத்தாபனம்,

**<u>இலவசமாக பசளைகளை பகிர்ந்தளிப்பது தொடர்பான 5/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை திருத்தம் (II) - 2020 சிறுபோகம்</u>**

2020.03.30 ஆம் திகதி "COVID 19" தொற்றுநோய் பரவி வரும் இந்த நிலைமையில் விவசாய செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்வது தொடர்பான முறையியல் பற்றி கலந்துரையாடும் நிமித்தம் கௌரவ மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சரின் தலைமையில் நடந்த கூட்டத்தின் போது, விவசாயத் துறையிலுள்ள சகல நிபுணர்களும், நெற் பயிர்ச் செய்கையில் TSP பசளை வகையின் பாவனையை குறைக்க வேண்டும் எனவும் அதே போல் ஏற்கெனவே ஒரு பயிர்ச் செய்கை போகத்திற்கும் அதிக போகங்களுக்கு தேவையான பொசுபரசு பசளைகளின் அளவு வயல் காணிகளில் காணப்படுகிறது எனவும் சுட்டிக் காட்டப்பட்டது. அதற்கு அமைய அந்த நிபுணர்களினால் கீழ்காணும் சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. TSP பசளையை ஒரு பயிர்ச் செய்கை போகம் விட்டு அடுத்த பயிர்ச் செய்கை போகத்தில் பெற்றுக் கொடுத்தல்
2. ஏற்கெனவே சிறுபோகத்தின் போது ஏதாவது ஒரு மாவட்டத்திற்கு போதிய அளவான பசளைகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பின், அந்த


ලේකම් දුරකථන தொலைபேசி Telephone - 011-2879048 කාර්යාලය දුරකථන தொலைபேசி Telephone - 011-2872093, 011-2872097
செயலாளர் ඊ-මේල් மின்னஞ்சல் e- mail - secretary@agrimin.gov.lk அலுவலகம் ඊ-මේල් மின்னஞ்சல் e- mail - info@agrimin.gov.lk
Secretary ෆැක්ස් தொலைநகல் Fax - 011-2863497 Office ෆැක්ස් தொலைநகல் Fax - 011-2868910

மாவட்டம் தவிர ஏனைய மாவட்டங்களுக்கு TSP பசளையின் அளவை 50% வீதத்தால் குறைத்து விநியோகித்தல்

இந்த சிபாரிசுகளை கருத்திற் கொண்ட கௌரவ அமைச்சர் அவர்கள் இந்த பயிர்ச் செய்கை போகத்தில் ஏற்கெனவே பசளைகள் பகிர்ந்தளிக்கப்படாத சகல கமநல அபிவிருத்தி நிலையங்களுக்கும் சொந்தமான விவசாயிகளுக்கு 2019/20 பெரும்-போகத்தில் சிபாரிசு செய்யப்பட்டுள்ள TSP பசளைகளில் 50% வீதத்தை பெற்றுக் கொடுக்குமாறு கட்டளையிட்டுள்ளார்கள்.

ஆகையால், உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இது வரை பசளைகள் பகிர்ந்தளிக்கப்படாத கமநல அபிவிருத்தி நிலையங்களினால் விவசாயிகளுக்கு பசளைகள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டியிருப்பது 2019/20 பெரும்போகத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ள அளவில் 50% வீதம் மாத்திரமாகும் என இத்தால் அறியத் தருகின்றேன்.

நீல் பண்டார ஹபுஹின்ன
செயலாளர்
மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும்
கிராமிய அபிவிருத்தி அமைச்சு

**பிரதிகள்:**

1. கௌரவ மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் அடங்கலாக அமைச்சரவை அந்தஸ்துடைய கௌரவ அமைச்சர்கள் அனைவருக்கும்
2. செயலாளர், நிதி பொருளாதார மற்றும் மறுசீரமைப்பு அபிவிருத்தி அமைச்சு
3. செயலாளர், பொது நிருவாகம் மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு
4. செயலாளர், நகர அபிவிருத்தி மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சு
5. இராஜாங்க செயலாளர், மகாவலி கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு
6. கணக்காய்வாளர் அதிபதி, கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்
7. செயலாளர், மாகாண கமத்தொழில் அமைச்சு
8. சகல மாகாணங்களினதும் பிரதான செயலாளர்கள்
9. சகல மாவட்ட செயலாளர்கள்
10. மேலதிக செயலாளர் (விவசாய தொழில் நுட்பம்), கமத்தொழில் அமைச்சு
11. மேலதிக செயலாளர் (அபிவிருத்தி), கமத்தொழில் அமைச்சு
12. பிரதான கணக்காளர், கமத்தொழில் அமைச்சு
13. சகல பிரதேச செயலாளர்கள்
14. பிரதான உள்ளக கணக்காய்வாளர், கமத்தொழில் அமைச்சு
15. தலைவர், கமத்தொழில் மற்றும் விவசாய காப்புறுதி சபை
16. பணிப்பாளர், தேசிய உர செயலக அலுவலகம்
17. தேசிய உர செயலக அலுவலகத்தின் மாவட்ட உதவி பணிப்பாளர்கள்